


# கேர்டாவும் ஹைன்ஸ்ம்

Nikolaus Heidelbach



ஒரு நாள் கேர்டாவிற்கு அவளுடைய பொம்மைகளுடன் விளையாடப் பிடிக்கவில்லை.



அவள் ஒரு குட்டி மனிதப்பொம்மையைச் செய்தாள். அதற்கு ஹைன்ஸ் எனப் பெயர் சூட்டினாள்.



ஹைன்ஸ் அழகாக இருந்தது. அதற்குச் சிரிக்கவும் தெரியும். இதற்குக் காரணம் அவள் எடுத்த தீவிர முயற்சியேயாகும்.

| | |
|---|---|
|  | அவள் படுக்கச் செல்லும் போது அதையும் அவளுடைய கட்டிலிற்கு அழைத்துச் சென்று பல கதைகளைக் கூறினாள். |
|  | கடந்த ஞாயிற்றுக்கிழமை கேர்டா ஹைன்ஸ் உடன் வெளியே உலாவச் சென்ற போது அதனால் தனியாக நடக்கவும் முடிந்தது. |
|  | கடந்த திங்கட் கிழமை காலை அது அவளுடைய காலில் கிள்ளியது. |
|  | கடந்த செவ்வாய்க்கிழமை அது அவளுடைய மதிய உணவு முழுவதையும் உண்டு முடித்துவிட்டது. |

| | |
|---|---|
|  | கடந்த புதன்கிழமை மாலை அது அவளை „புத்தி கெட்ட வாத்து!“எனக் கூறிக் கத்தியது. |
|  | கடந்த வியாழக்கிழமை அவள் அதை வெளியே எறிந்துவிட்டாள். |
|  | கடந்த வெள்ளிக்கிழமை ஹைன்ஸ் மீண்டும் ஒருதடவை வாசல் மணியை அழுத்தியது. அவள் கதவைத் திறக்கவில்லை. அதன் பின் அதற்கு என்ன நடந்தது என அவளுக்குத் தெரியாது. |
|  | முற்றும். |